# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப., (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 22/மா/2023**
**நாள் : 21.02.2023**

திரு. G.M. சங்கர்,
சென்னை – 600 091. – முறையீட்டு மனுதாரர்

உதவி ஆணையர்,
மண்டலம் - 14, பெருநகர சென்னை மாநகராட்சி,
சென்னை – 600 091. – எதிர்மனுதாரர்

பெருநகர சென்னை மாநகராட்சி, மடிப்பாக்கம், லெஷ்மி நகர் பிரதான சாலை, எண்.57B என்கிற முகவரியில் வசிக்கும் திரு. G.M. சங்கர் என்பவரின் 24.01.2023 நாளிட்ட மனு 30.01.2023 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 22/2023 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலனை செய்யப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

பெருநகர சென்னை மாநகராட்சி, மடிப்பாக்கம், லெஷ்மி நகர் பிரதான சாலை, எண்.57B என்கிற முகவரியில் வசிக்கும் திரு. G.M. சங்கர் தனது முறையீட்டு மனுவில்,

> "சென்னை பெருநகர மாநகராட்சியின் இணையவழி குறைதீர்க்கும் செயலி மற்றும் இணையவழியினை தவறாமல் பயன்படுத்துவோர் பெருகிவிட்டனர். ஆனால் குறைதீர்க்கும் பொறுப்பில் உள்ள பகுதிப் பொறியாளர்கள் அந்தந்த பகுதி அரசியல்வாதிகளின் கட்டுப்பாட்டில் செயல்பட்டு அவர்களை காப்பாற்றும் விதமாக செயல்பட்டு வருவது மாநகராட்சியின் நிர்வாகத்தினை சீர்கெடுப்பதுபோல உள்ளது. கடந்த 30.03.2022 சென்னை மடிப்பாக்கம் பேருந்து முனையத்தில் மாநகராட்சியின் அனுமதியில்லாமல் அரசியல் கட்சியினர் சட்டத்திற்கு புறம்பாக பேனர் வைத்தனர். அதனை உடனே கண்டறிந்து புகார் அளித்தேன். அந்த இடத்திற்கு நேர் எதிரே வார்டு 188 அலுவலகம் உள்ளது குறிப்பிடத்தக்கது. மேலும் மடிப்பாக்கம் பஜனை கோயில் தெருவில் ஒரு வழக்கறிஞர் அலுவலகத்தில் அரசு வழக்குரைஞரின் பெயரை பயன்படுத்தி விளம்பரப்பலகை வைத்திருந்தார்கள். அதனையும் அகற்ற புகார் அளித்திருந்தேன். ஆனால் இந்த இரண்டு புகாரையும் 187, 188 வார்டு பகுதி பொறியாளர்கள் மாற்றி மாற்றி தகவல் பரிமாறிக்கொண்டு பிறகு மடிப்பாக்கம் பகுதிக்கு துளியும் தொடர்பில்லாத வார்டு 174 பகுதி பொறியாளரை விட்டு எனது

புகாருக்கு எந்தவித தீர்வும், நடவடிக்கையும் எடுக்காமல் முடித்துவிட்டனர். இந்த போக்கு நிர்வாகத்தின் சீர்கேட்டினை தெளிவாக எடுத்துரைக்கிறது. மேலும் தவறு செய்யும் அரசியல் பின்புலம் உள்ளவர்களை இதுமாதிரி அலுவலர்கள் காப்பாற்றிக்கொண்டே வந்தால் குற்றம் பெருகிக்கொண்டே தான் போகும்.

ஆகையால் தக்க ஆதாரங்களுடன் புகார் அளித்தும் தவறு செய்தவர்களை காப்பாற்றும் விதமாக செயல்பட்ட மடிப்பாக்கம் 187, 188 பகுதி பொறியாளர்கள் மீது சென்னை மாநகராட்சி சட்டப்படி துறைரீதியான நடவடிக்கை எடுக்குமாறும், நான் அளித்த புகாருக்கு தக்க நடவடிக்கை மற்றும் தீர்வுகள் சட்டப்படி எடுத்து அந்த அனுமதியில்லாமல் வைக்கப்பட்ட விளம்பரப்பலகையை அகற்ற ஆவன செய்யுமாறு தங்களை பணிவுடன் வேண்டிக் கொள்கிறோம் " எனத் தெரிவித்துள்ளார்.

**மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு, பெருநகர சென்னை மாநகராட்சியின் மண்டலம் - 14 உதவி ஆணையரிடம் கோரப்பட்டது.**

**பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-14ன் செயற்பொறியாளர் 13.02.2023 நாளிட்ட தனது அறிக்கையில்:-**

மனுதாரரின் மனு குறித்து தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிப்பது யாதெனில் பெருநகர சென்னை மாநகராட்சி பொறியாளர்கள் மனுவில் குறிப்பிட்டுள்ளது போன்று அரசியல்வாதிகள் கட்டுப்பாட்டில் செயல்படாமல் மாநகராட்சி நிர்வாகத்தின் மூலமாக பொதுமக்களுக்காக பணியாற்றி வருகின்றனர். அதேபோன்று மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் அரசியல் கட்சிகள் வைக்கும் பேனர்கள் மற்றும் கட்சிக் கொடிகம்பங்கள் வைக்காமல் கண்காணிக்கப்பட்டு ஏதேனும் பேனர்கள் மற்றும் கொடிக்கம்பங்கள் இருந்தால் உடனுக்குடன் அகற்றப்படுகிறது.

மேலும் கோட்டம் -187 மடிப்பாக்கம் பஜனைக் கோவில் தெருவில் திருவாளர் R.R. Law Associates, Legal Consultants அலுவலகத்தின் வெளிப்புறச் சுவரில் 8" x 4" அளவில் அரசு வழக்கறிஞர்கள் பெயருடன் பெயர்ப்பலகை போக்குவரத்திற்கு இடையூறு இல்லாமல் வைக்கப்பட்டுள்ளது என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

எனவே விளம்பரப்பலகை சம்மந்தமாக அளிக்கப்பட்ட புகாரையும் 187, 188 வார்டு பகுதி பொறியாளர்கள் மாற்றி மாற்றி தகவல் பரிமாறிக்கொண்டு பிறகு மடிப்பாக்கம் பகுதிக்கு தொடர்பில்லாத வார்டு 174 பகுதி பொறியாளருக்கு கணினி மூலமாக தவறுதலாக சென்றுள்ளதாக (Forward) தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ளது போன்று எவ்வித உள்நோக்கமும் இல்லை என பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

**2. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோர் 13.02.2023 அன்று நேரடி விசாரணைக்கு வருமாறு அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

மனுதாரர் 13.02.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை கீழ்க்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்.

கடந்த 30.03.2022 அன்று சென்னை மடிப்பாக்கம் பேருந்து முனையத்தில் மாநகராட்சியின் அனுமதியில்லாமல் அரசியல் கட்சியினர் சட்டத்திற்கு புறம்பாக பேனர் வைத்தனர். அது குறித்து மண்டலம்–14 அலுவலர்களுக்கு புகார் மனு அளித்தேன். மேலும் மடிப்பாக்கம் பஜனை கோவில் தெருவில் ஒரு வழக்கறிஞர் அலுவலகத்தில் அரசு வழக்குரைஞரின் பெயரைப்பயன்படுத்தி விளம்பரப்பலகை வைத்திருந்தது குறித்தும், அதனை அகற்றும்படி புகார் மனு பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்–14 அலுவலகத்தில் அளித்திருந்தேன். ஆனால் இந்த இரண்டு புகார்களையும் 187, 188 வார்டு பகுதி பொறியாளர்கள் தங்களுக்குள் தகவல் பரிமாறிக்கொண்டு பிறகு மடிப்பாக்கம் பகுதிக்கு துளியும் தொடர்பில்லாத வார்டு 174 பகுதி பொறியாளர் மூலம் எனது புகாருக்கு தீர்வும், நடவடிக்கையும் எடுக்காமல் முடித்துவைத்து விட்டனர். சென்னை பெருநகர மாநகராட்சி சட்டப்பிரிவு 326CC–ன் கீழ் விளம்பரப்பலகைக்கு கட்டணம் வசூலிக்கப்பட வேண்டும். ஆனால் அவ்வாறு செய்யவில்லை. ஆகையால் தக்க ஆதாரங்களுடன் புகார் அளித்தும் தவறு செய்தவர்களை காப்பாற்றும் விதமாக செயல்பட்ட மடிப்பாக்கம் 187 மற்றும் 188 பகுதி பொறியாளர்கள் மீது துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை எடுக்குமாறு இம்முறைமன்றத்தைக் கேட்டுக்கொள்கிறேன். இதுதொடர்பான புகைப்படங்களையும் இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்.

மேலும் 27.01.2023 நாளிட்ட எனது புகார் மனுவில் தெரிவித்துள்ளதை எனது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறைமன்ற நடுவத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

**பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் - 14ன் உதவி செயற்பொறியாளர் மற்றும் உதவிப் பொறியாளர் ஆகியோர் 13.02.2023 அன்று நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி தங்களது வாக்குமூலத்தை பின்வருமாறு சமர்ப்பித்துள்ளனர் :**

"மனுவில் குறிப்பிட்டுள்ளதற்கு மாறாக, பெருநகர சென்னை மாநகராட்சி பொறியாளர்கள் சென்னை பெருநகர மாநகராட்சி நிர்வாகத்தின் மூலமாக பொதுமக்களுக்காக பணியாற்றி வருகின்றனர். அதேபோன்று மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் அரசியல் கட்சிகள் வைக்கும் பேனர்கள் மற்றும் கட்சிக்கொடிக்கம்பங்கள் இருந்தால் உடனுக்குடன் அகற்றப்படுகின்றன. மேலும் கோட்டம் 187 மடிப்பாக்கம் பஜனை கோவில் தெருவில் திருவாளர் R.R. Law Associates, Legal Consultants அலுவலகத்தின் வெளிப்புற சுவரில் 8"x4" அளவில் அரசு வழக்கறிஞர்கள் பெயருடன் பெயர்ப்பலகை போக்குவரத்திற்கு இடையூறு இல்லாமல் வைக்கப்பட்டுள்ளது என இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம். மேலும் மனுதாரர் அளித்த புகார் வார்டு 187, 188 பகுதி பொறியாளர்களுக்கு பதில் தவறுதலாக கணினி மூலம் 174 பகுதி பொறியாளருக்கு மாற்றம் செய்யப்பட்டது என்பதையும் இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம். மேற்கண்ட வழக்கறிஞர் வைத்துள்ள பெயர்ப்பலகைக்கு சட்டப்பூர்வமான கட்டணம் வசூல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதையும் இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம்" என தெரிவித்துள்ளார்.

**முறையீட்டு மனுதாரரின் மனு, வாக்குமூலம், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் – 14ன் உதவி செயற்பொறியாளர் மற்றும் உதவிப் பொறியாளரின் வாக்குமூலல் மற்றும் செயற் பொறியாளரின் அறிக்கை ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் பின்வரும் விவரங்கள் அறிய முடிகிறது.**

மனுதாரர் மடிப்பாக்கம் பஜனை கோவில் தெருவில் உள்ள வழக்கறிஞர் ஒருவரின் அலுவலகத்தில் அரசு வழக்குரைஞரின் பெயரை பயன்படுத்தி பெயர் பலகை வைத்து இருப்பதை அகற்ற புகார் மனு அளித்தும், பெருநகர சென்னை மாநகராட்சியின் 14ன் மண்டல அலுவலர்கள் வெவ்வேறு வார்டுகளுக்கு புகார் மனுவினை மாற்றி, தனது புகாருக்கு எவ்வித தீர்வும், நடவடிக்கையும் எடுக்காமல் இருந்ததாகவும், அவ்வாறு நடவடிக்கை எடுக்காமல் இருந்த மண்டலம் - 14ன் அலுவலர்களின் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறும் கோரியிருந்தார்.

மனுதாரர் குறிப்பிட்டவாறு, மடிப்பாக்கம் பஜனை கோவில் தெருவில் வழக்கறிஞர் ஒருவா விளம்பரப்பலகை வைத்திருப்பது மனுதாரரின் வாக்குமூலம், புகைப்பட நகல்கள், மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் - 14ன் உதவி செயற்பொறியாளர் மற்றும் உதவி பொறியாளரின் வாக்குமூலம் மற்றும் செயற் பொறியாளரின் அறிக்கை ஆகியவற்றின் மூலம் அறிய முடிகிறது.

மனுதாரர் 20/3/22 அன்று பெருநகர சென்னை மாநகராட்சிக்கு இணையதளம் மூலமாகவும், ஆணையாளர் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு, 9.5.2022 நாளிட்ட மனு மூலமாகவும் மேற்கண்ட பொருள் குறித்து புகார் அளித்தும், இம்முறைமன்ற விசாரணைக்கு வரும் நாள் வரை பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் -14ன் அலுவலர்களால் எந்தவித நடவடிக்கையும் எடுக்காதது மிகவும் கண்டிக்கத்தக்கது ஆகும்.

<u>Chennai City Municipal Corporation Act 1919, - Chapter XII –A</u>ல் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. <u>326A Definition</u> – In this chapter :

(a) "hoarding" means any screen of boards other than digital banner and placard, at any place, whether public or private used or intended to be used for exhibiting advertisement, including the frame work or other support, erected, wholly or in part upon or over any land, building , wall or structure, visible to public wholly or partly :

(b) "digitial banner" means any screen of boards at any place, whether public or private used or intended to be used for exhibiting any advertisement or any information in connection with marriage, religious ceremony, birth or death anniversary or meeting or conference of any political, religious or communal organization, designed and printed using electronic printing technology:

(c) "placard" means any screen of boards, the size of which is not exceeding eight feet in height and four feet in breadth, at any place, whether public or private, used or intended to be used for exhibiting any advertisement or any information in connection with marriage, religious, ceremony, birth or death anniversary or meeting or conference of any political, religious or communal organization, designed and printed using electronic printing technology.

மேலும் hoardings for advertisements: Municipal Corporation can grant licences or the putting up of hoardings for advertisements so long as the Corporation does not interfere with the public use of footpath or pavement. [Shree Modhusudan Mills Ltd., v. Corporation of Calcutta, AIR 1976 Cal 133].

மேலும்; The Chennai City Municipal Corporation Act 1919 கீழ்க்கண்ட பிரிவுகளில் "விளம்பர பலகை வைப்பது குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

**326 – B. Prohibition for erection of hoardings.** – (1) No hoarding shall be erected at any place, on or after the 23rd day of July. 1998 (hereafter in this section referred to as the said date) by any person without obtaining a licence from the [District Collector].

**326 – C. Application for licence, -** (1) Every application for licence under this Chapter shall be made to the [District Collector] in such form, containing such particulars and with such fee, as may be prescribed.

**326 – CC. Tax on advertisement on hoardings –** (1) Not-with-standing anything contained in this Act, every person, who is granted licence under action 326-C shall pay, on every advertisement on hoardings, a tax calculated at such rates as may be prescribed, having regard to the location, size, reach and nature of the advertisement but subject to the maxima and minima specified in the Table below –

**TABLE**

| Location and Nature | Rates of tax per square metre per half-year (Rupees) | |
|---|---|---|
| (1) | (2) | |
| | Minimum | Maximum |
| 1. Hoardings in arterial road with bus route – | | |
| (a) without lighting : | 250 | 400 |
| (b) with ordinary lighting : | 300 | 600 |
| (c) with neon or mercury lighting. | 350 | 700 |
| 2. Hoardings in main road with bus route | | |
| (a) without lighting : | 180 | 300 |
| (b) with ordinary lighting : | 230 | 400 |
| (c) with neon or mercury lighting. | 280 | 500 |
| 3. Hoardings in other road or street – | | |
| (a) without lighting : | 120 | 200 |
| (b) with ordinary lighting : | 150 | 300 |
| (c) with neon or mercury lighting. | 200 | 400 |

(2) The tax paid under sub-section (1) shall be credited to the Corporation Account in such manner as may be prescribed.

மேற்கண்ட சென்னை முனிசிபல் கார்ப்ரேஷன் சட்டம் 1919ஐ பற்றி எந்தவிதமான அடிப்படை புரிதலும் இல்லாமல் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-14ன் அலுவலர்கள் விசாரணையில் கலந்து கொண்டது மிகவும் கண்டிக்கத்தக்கது, மற்றும் வேதனைக்குரியது என்று இம்முறைமன்றம் கருதுகிறது.

மேலும் மனுதாரரின் புகார் குறித்து சட்டப் பூர்வமான நடவடிக்கை எடுக்காமலும் விளம்பர பலகைக்கு உரிய கட்டணம் மேற்கண்ட சட்டத்தின்கீழ் வசூல் செய்யாமலும் இருந்த பெருநகர சென்னை மாநகராட்சியின் மண்டலம் - 14ன் முன்னாள் மற்றும் இந்நாள் அலுவலர்களை பொறுப்பாக்கி அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்குமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு பரிந்துரை செய்து இம்முறைமன்றம் ஆணையிடுகிறது. மேலும், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் - 14ன் உதவி செயற்பொறியாளர் மற்றும் உதவி பொறியாளர் ஆகியோர் தங்கள் வாக்குமூலத்தில் தெரிவித்தவாறு, மனுதாரர் குறிப்பிட்ட விளம்பர பலகை குறித்து உரிய சட்டப் பூர்வமான நடவடிக்கை எடுக்குமாறு பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் - 14ன் உதவி ஆணையருக்கு அறிவுரை வழங்கி இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

The perverse attitude of the field officials in this case is condemned outright in strong terms. No action was taken by the delinquent officials on the petition of the petitioner for reasons best known to them only. Such indifference slackness and insensitive conduct deserve severe disciplinary action against them by the Greater Chennai Corporation Commissioner. They are directly abetting such deviations by keeping name boards without collecting the Tax for the same causing loss of Revenue to the Greater Chennai Corporation. The Assistant Commissioner of the Zone is directed to order a survey of such banners, hoardings and boards kept in the area without any tax collections due to the carelessness, collusion, complicity and connivance of the delinquent field officials. Such leakage of Corporation revenue is not taken cognizance of by the Zonal Officials that is sheer dereliction of duties and betrayal of dedication to the service in the Greater Chennai Corporation. The Forum expresses its shock and deep concern over this episode. Unless the Greater Chennai Corporation takes this seriously the trend will worsen further leading to revenue loss, non-adherence to rules and professional indiscipline.

2023–ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 21–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு. G.M. சங்கர்,
எண்.57B, லஷ்மி நகர் பிரதான சாலை,
மடிப்பாக்கம், சென்னை – 600 091.

2) அரசு முதன்மைச் செயலாளர் / ஆணையாளர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.

3) துணை ஆணையர் (பணிகள்)
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.

4) உதவி ஆணையர்
மண்டலம் - 14, பெருநகர சென்னை மாநகராட்சி,
6/64, புழுதிவாக்கம் பிரதான சாலை, சென்னை – 600 091.

5) துணை ஆணையர் (பணிகள்)
மண்டலம் - 14, பெருநகர சென்னை மாநகராட்சி,
6/64, புழுதிவாக்கம் பிரதான சாலை, சென்னை – 600 091.

6) கண்காணிப்பு பொறியாளர்,
மழைநீர் வடிகால்துறை,
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்

இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

23/2/23

செயலாளர்

23/2/23

5/10